Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9

தபால் பெட்டி எண் : 49
போன் 589

இதழ் 137

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 14 ரபி அவ். 19 புதன்கிழமை [28-6-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கை தேயிலை அதிகமாக வாங்க ஜப்பான் விருப்பம்

## பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதிலும் அக்கறை

### டட்லி விஜயத்தின் பிரதிபலன்

டோக்கியோ, ஜூன் 27

இலங்கை தேயிலையை அதிகமாக இறக்குமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு உதவ ஜப்பான் அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தனது சர்வதேச நிறுவனங்கள் மூலமாக உதவுவதற்கும் ஜப்பான் விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

இலங்கைப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா ஜப்பான் பிரதம மந்திரி திரு. சாட்டோவையும், வேறு அரசாங்க அதிபர்களையும் இன்று சந்தித்துப் பேசியதன் பயனாக ஜப்பான் அரசாங்கம் இந்த உதவிக்கு முன்வந்துள்ளது.

பிரதம மந்திரி இன்று ஜப்பான் பிரதம மந்திரி திரு. சாட்டோவுடன் மேற்காசிய நெருக்கடி, வியட்னும் பிரச்னைகள் பற்றியும் ஆலோசனை நடத்தினர்.

இன்று பிற்பகல் ஜப்பான் சக்கரவர்த்தியை பிரதமர் திரு. டட்லி சந்தித்தார்.

ஜப்பான் நிதி மந்திரியையும் திரு. டட்லி சந்தித்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## 'ஜீப்'பில்வந்த பெண்களுக்கு சேலைகள் திடீர் விற்பனை

### 'காஞ்சிபுரம்' வாங்கச்சென்ற பொதுமக்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

சுங்கப்பகுதியினரால் காங்கேசன்துறை வீதியிலுள்ள கடையில் நடந்த சோதனையைத்தொடர்ந்து நேற்றுக்காலை அக்கடையில் காஞ்சிபுரம், டெக்கா, மணிமகுடம் சேலைகள் அரசாங்க ஊழியர்களின் மனைவிகளுக்கும் தாய்மார்களுக்கும் விற்பனை செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

ஆனால் இச்சேலைகளுக்கு கடைக்காரர் ரசீது வழங்கவில்லை யெனத்தெரியவருகிறது.

சாதாரண பொதுமக்களுக்கு விலைகுறைந்த சேலைகள்மட்டும், அதுவும் கட்டுப்பாட்டு விலைக்கு கூடுதலாக ஒரு சாறி 30 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டதாம்.

நேற்றுக்காலை திடீரென

[8-ம் பக்கம் பார்க்க]

## டாக்டர்கள் 'தாமதவேலை'

### யாழ். ஆஸ்பத்திரியை பாதிக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன்

டாக்டர்களின் தாமத வேலை இயக்கம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை எவ்விதத்திலும் பாதிக்கவில்லையென்றும், வழக்கம் போல் வேலைகள் நடைபெற்று வருவதாகவும், ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

வழக்கம்போல்வார்ட்டிலிருந்து சுகமடைந்தவர்கள் டிக்கட் வெட்டப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறார்களென்றும், அதேபோல் புதிய நோயாளிகள் வாட்டில் அனுமதிக்கப்படுகிறார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சில வார்ட்டுகளில் இட நெருக்கடி, டாக்டர்களின் வேலை நிறுத்தத்தால்ஏற்பட்டதல்லவென்றும், ஏற்கனவே பல வருடங்களாக சில வார்ட்டுகளில் இட நெருக்கடி இருந்து வந்ததென்றும் மற்றொரு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் வரை வார்ட்டில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு தாமதமின்றி சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும், புதிதாக அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு வார்ட்டில் கட்டில் கொடுக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

வழக்கம் போல வெளி நோயாளர்கள் மருந்து வாங்கிச் சென்றனர். நேற்று ஆஸ்பத்திரியில் கூட்டம் அதிகமாகக் காணப்படவில்லை.

கொழும்பு கலைச்சங்கத்தினரின்

புரோக்கர் கந்தையா

என்னும் நாடகம்

வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி கட்டடநிதிக்காக

திரு. G. G. பொன்னம்பலம் Q. C. MP.

அவர்கள் தலைமையில்

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில்

28-6-67 புதன் மாலை 6-30 மணிக்கு நடைபெறும்.

ரிக்கட் விபரம்:- ரூபா 10, 5, 3, 1-50

கிடைக்குமிடம்: வைரமாளிகை, யாழ்ப்பாணம்.
ராஜூ ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
சுபாஸ் கபே, யாழ்ப்பாணம்.

2374

ரயிலில் மரணமான தர்மராஜா:

## சந்தேகிக்கப்பட்ட மூவர் திடீரென தலைமறைவு

### இன்ஸ்பெக்டர் சிவபாதம் கம்பஹா சென்றார்

யாழ்ப்பாணம், புதன்

ரயிலில் மரணமான தர்மராஜாவின் மரணம் சம்பந்தமாக பூரணமாகத் துப்புத் துலக்க வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் உத்தரவைத் தொடர்ந்து காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் நேற்றுக்காலை கம்பஹா பயணமானார்.

மரணமான தர்மராஜா சம்பவம் நடந்த அன்று ரயிலில் பிரயாணம் செய்யும் போது அவருடன் பிரயாணம் செய்த அரநாயக்கா என்ற இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரையும் விசாரணை செய்ய இன்ஸ்பெக்டர் சிவபாதம் அரநாயக்காவுக்கும் செல்வார் எனத் தெரிகின்றது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாதமும் அவருடன்

[8-ம் பக்கம் பார்க்க]

## டாக்டர் மலலகம மீதான குற்றச்சாட்டுகள்

### விசாரணை நடக்கும்

கொழும்பு, செவ்.

டாக்டர் திருமதி மலலகம மீதான குற்றச்சாட்டுகள் பற்றி இன்று விசாரணை நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கவலையீனமாகக் கடமை புரிந்ததற்காக இவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரி டாக்டர்கள் நடத்திவரும் 'தாமதவேலை' இயக்கத்துக்கு இந்த டாக்டரின் பிரச்னைதான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையை வைத்திய அத்தியட்சர் டாக்டர் அருளானந்தம் நடத்துவார். டாக்டர் திருமதி மலலகம சார்பில் ஏ. ரி. எஸ். போல் ஆஜராவார்.

## கோடீஸ்வரன் வழக்கு

கொழும்பு, செவ்.

கோடீஸ்வரன் அப்பீல் வழக்கு ஜூலை மாதம் 17-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று திரு. கோடீஸ்வரன் சார்பில் திரு. சி. ரங்கநாதன் கியூ. ஸி. ஆஜராகி தமது விவாதத்தை முடித்துக்கொண்டார். இந்த வழக்குத் தற்போதைய நிலைமையில் உயிரிழந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால் அரசாங்கம் இந்த வழக்கில் கோர்ட்டாரின் தீர்ப்பு ஒன்றை எதிர்பார்க்கின்றது. ஜூலை 17-ம் திகதி சொலிஸிட்டர் ஜெனரல் வோல்டர் ஜயவர்த்தனா அரசாங்கத் தரப்பு வாதத்தை எடுத்துரைப்பார்.

## அறிவித்தல்

விசுவமடு படித்த வாலிபர் திட்டத்திலுள்ளவர்களால் 28-6-67 கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடாத்தப்படவிருந்த நீதி பிறக்குமா? என்னும் நாடகம் சில வசதிக்குறைவினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாடகம் நடாத்தும் திகதி அறிவிக்கப்படும்.

விசுவமடு படித்த வாலிபர்

2383

## மரண அறிவித்தல்

திருமதி கண்ணம்மா வைத்திலிங்கம் செட்டியார்

வண்ணார்பண்ணை சிவன் கோவில் திருமதி கண்ணம்மா வைத்திலிங்கம் செட்டியார் அவர்கள் சிவலோகப்பிராப்தி அடைந்தார்கள். இன்று பிற்பகல் 3-30 மணியளவில் தகனக்கிரியைக்காக புனித சடலம் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2382

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### முகாமையாளர் தேவை

பிராயம்பற்றை சரஸ்வதி பல. நோ. கூ. சங்கத்திற்கு முகாமையாளர் தேவை. தராதரம் சி. த. பத்திரம் உள்ளவரும் கூட்டுறவுப் பயிற்சிபெற்றவரும், சம்பளம் 100 ரூபா எல்லாம் உட்பட. பிணை ரொக்கம் 1000 ரூபா, ஆதனம் 2000 ரூபா. விண்ணப்பங்களை மேற்படி சங்கக் காரியதரிசிக்கு 10-7-67க்கு முன்பதாக அனுப்பிவைக்கவும்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

2381

### ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி திரு. எஸ். கனகசபை J. P. அவர்களிடம் 1-1-65 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 11-7-67செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
2376 ஏலவிற்பனவாளர்.

## ''8 நாட்களுள்பார்த்துக்கொள்வதாக குலசிங்க நாதன் சொன்னர்''

### மண்டைதீவு கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

'சம்பவம் நடந்த தினத்தன்று நான்கு பேர் வந்து எனது டாக்ஸியை மண்டைதீவுக்குச் செல்ல வாடகைக்குவிடும்படி கூறினர்கள். அவர்களில் 1-ம், 2-ம் எதிரிகளைத்தான் என்னுல் அடையாளம் காட்டமுடியும். டாக்ஸியில் நால்வரையும் ஏற்றிக்கொண்டு மண்டைதீவுக்குச் செல்லும்போது பஸ் ஒன்று வீதியில் நின்றதால் நான்டாக்ஸியை மெதுவாக நிறுத்தினேன். உடனே டாக்ஸியில் இருந்தவர்கள் இறங்கி 'அடியடா, அடியடா' என்றுகத்திக்கொண்டு பஸ்ஸை நோக்கி ஓடினர்கள்'' என மண்டைதீவு கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த டாக்ஸி சாரதியான திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. மொகமட் ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த ஐயாத்துரை சாம்பசிவமூர்த்தியைக் கொலை செய்ததாக அதேஇடத்தைச் சேர்ந்த குலசிங்கநாதன், சிவபாலசுந்தரம், பாலசிங்கம், தருமு ஆகிய நால்வர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

மரணமானவரின் மைத்துனரான சதாசிவம் சண்முமூர்த்தி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது;-

சம்பவம் நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர் பஸ்ஸில் வைத்து முதலாம் எதிரியான குலசிங்கநாதன் எனக்கு அடித்தார். அப்போது மரணமான எனது மைத்துனர் அவருக்கு அடித்தார். உடனே குலசிங்கநாதன் மரணமான எனதுமைத்துனரைப் பார்த்து '8 நாட்களுக்குள் நான் உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறினர். பின்னர் சம்பவம் நடந்த தினத்தன்று இரவு சபாரத்தினம் என்பவர் என்னிடம் வந்து மரணமானவர் குத்தப்பட்டுக் கிடப்பதாகச் சொன்னர். நான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றபோது அவர் இரத்தம் வடிந்த நிலையில் கிடந்தார். வான் ஒன்றில் அவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது அவர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதலாம், இரண்டாம் எதிரிகள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனியும், மூன்றும் எதிரி சார்பில் வழக்கறிஞர் சுந்தரலிங்கமும், நாலாம் எதிரி சார்பில் புறக்டர் ஏ. விசுவநாதனும் ஆஜராகியிருந்தார்கள். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் மெண்டிஸும், புறக்டர் எஸ். சி. கதிரவேலுவும் வழக்கை நடத்தினர்கள். மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை அடுத்த மாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

[ந. நி.]

## 'தரகர் கந்தையா'

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு கலைச்சங்கத்தினரின் தயாரிப்பான ''தரகர் கந்தையா'' என்னும் நாடகம் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் இம்மாதம் 28-ந் திகதி இரவு நடைபெறவிருக்கின்றது. இந்நாடகத்துக்கு யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை வகிப்பாரென்றும் இந்நாடகத்தின்மூலம் சேர்க்கப்படும் நிதி வல்வெட்டித்துறைச் சிதம்பராக் கல்லூரிக் கட்டிட நிதியில் சேர்க்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

## மக்கள் அவதி

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் தபால் கந்தோரில் கடந்த சில தினங்களாக பொதுமக்கள் தந்தியடிக்கமுடியாமலும், தொலைபேசித்தொடர்பு கொள்ள முடியாமலும் மிகவும் அவதியுறுகின்றனர். 'சுவிட்ஸ் போர்ட்' விட்டு விட்டு வேலை செய்வதும், தந்திக் கம்பி அறுவதுமே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 28 - 6 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடி விளையாடுபாப்பா.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு— வி. விஜயசிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 விவாதமேடை — உங்கள் பிரச்னை, 10-00 நேயர் விருப்பம்.

## ஓய்வுபெற்ருர்

சங்கானை, செவ்வாய்

சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் கடந்த 32 வருடகாலமாக ஆசிரியராகவும், உதவித் தலைமையாசிரியராகவும் கடமையாற்றிய சித்தன்கேணியைச் சேர்ந்த திரு. சு. இரத்தினம் தமது 60வது வயதில் இம்மாதம் 15ந் தேதி முதல் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

## வரிவிளம்பரம்

### தேவை

பங்காளர்

யாழ். நகரில் நன்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் மில்டறி ஹோட்டலொன்றுக்கு நிர்வாகப்பங்காளர் தேவை. முதலீடு செய்யக்கூடியவர்கள் விளம்பர இல. 2478 மே பா 'ஈழநாடு' என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2478

கடைச்சல் வேலையாளர்

அனுபவமுள்ள கடைச்சல் வேலைதெரிந்தவர்கள் உடன் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு- விளம்பர இல. 2472, 'ஈழநாடு' மே/பா, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2472

### விற்பனைக்கு

காணி

உரும்பராய் வடக்கில் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பரஇல. 2476 'ஈழநாடு' மே/பா, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2476

### கல்வி

ஆறு [6] மாதத்தில் ஆங்கிலம் அல்லது சிங்களம் எழுத, வாசிக்க, பேச வேண்டுமா? விபரங்களுக்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும். கல்விநிலையம், சிவயோக ஹாட்வெயர்ஸ் மேல்மாடி, 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2474

## டெலிபோன் வசதி கிடைக்கும்

கொம்பனித்தெரு, செவ்.

புங்குடுதிவு குறிகாட்டுவான் உபதபால்கந்தோருக்கும் ஊரதீவு உப தபால் கந்தோருக்கும் விரைவில் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட இருப்பதாகவும் புங்குடுதீவுப் பொதுமக்களும் ஊர்காவற்றுறைஎம். பி.நவரத்தினமும் தபால் தந்திப் பகுதி அதிகாரிக்குப் பலமுறை புகார் செய்யப்பட்டதை தொடர்ந்தே இந்நிலையங்களுக்கு தொலைபேசி வசதி கிடைக்கவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

## 35,000 ரூபா வீதி திறக்கப்பட்டது

புன்னலைக்கட்டுவன், செவ்.

உரும்பராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் சுமார் ரூபா 35,000 செலவில் அமைத்த உரும்பராய் -சுன்னுகம் வீதியை, சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் திறந்துவைத்தார்.

திருவாளர்கள் செ. ஐயாத்துரை, அ. சு. வல்லிபுரம் ஆகியோர் பேசினர்.




லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற்கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

# மில்லர்ஸ்

லிமிடெட்.

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியஐயர் அவர்கள்
கூறுகிருர்கள்:

## சுந்தரம் பிறதர்ஸ்

ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்

# பச்சை சந்தனம்

கோவில் தேவைகட்கும்
மற்றும் மங்களக்காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்

## சந்தனக் காப்பிட்டு

அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.

## சுந்தரம் பிறதர்ஸ்

(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலையவீதி — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடாக உடனடியாக கண்டிக்க வேண்டும்

## ஐ. நா. பொதுச் சபையிடம் ஜோர்தான்மன்னர்கோரிக்கை

### 'ஒரு சதுர அடியையும் இஸ்ரேலிடம் விடக்கூடாது'

நியூயோர்க், ஜூன் 27

இஸ்ரேலை அதன் துருப்புகளை அரபுப் பிராந்தியங்களிலிருந்து வாபஸ்பெறுமாறு நிர்ப்பந்திக்குமாறு ஜோர்தான் மன்னர் ஹுசெயின், ஐ. நா. பொதுச் சபையைக் கேட்டுள்ளார்.

நேற்று ஐ. நா. பொதுச்சபையில் மேற்கு ஆசிய விவகார விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜோர்தான் மன்னர் இவ்வாறு கேட்டிருந்தார்.

"ஆக்கிரமிப்பு மூலம் இஸ்ரேல் தன்வசமாக்கியுள்ள பிராந்தியங்களில் ஒரு சதுர அடியைத்தானும் அது வைத்திருக்க ஐ. நா.சபை அனுமதித்தால் போர் நிறுத்த உத்தரவை அளித்துவிட்டு, அது நிறைவேற்றப்படும் என்றுஇச்சபைஇனிஒருபோதும் எதிர்பார்க்க முடியாது'' என்றார் மன்னர் ஹுசெயின்.

ஆக்கிரமிப்புக்குத் தனது கண்ணை மூடிக் கொண்டிருப்பதா அல்லது அதற்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்டவதா என்பதைச் சபை தீர்மானிக்க வேண்டுமென்றும் மன்னர் ஹுசெயின் கூறினர்,

இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடாகப் பிரகடனப்படுத்தும்படியும், இஸ்ரேல் துருப்புகளை அரபுப் பிராந்தியங்களிலிருந்து உடனடியாக வாபஸ் பெறுமாறு உத்தரவிடும்படியும் மன்னர் ஹுசெயின், ஐ. நா. பொதுச் சபையைக் கேட்டுக் கொண்டார். இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடாக ஐ. நா. பந்தோபஸ்து சபை இதுவரை கண்டிக்காததையிட்டுத் தாம் பெரிதும் ஆச்சரியமுற்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

**'பெரிய திட்டத்தின் ஒரு பகுதி'**

அராபியர்களுக் கெதிராக இஸ்ரேல் நேபாம், சிதறு வெடி குண்டுகள் பாவித்ததாகவும், யுத்தக் கைதிகளை இம்சித்து வருவதாகவும், இஸ்ரேல் பகுதிகளிலிருந்து அரபு மக்கள் ஆயிரக் கணக்கில் அகதிகளாக வெளியேறுவதாகவும் ஜோர்தான்மன்னர் குற்றஞ்சாட்டினர். உலக ஸ்தாபனம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிடில், அகதிகள் தொகை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரபு நாடுகள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு தனிப்பட்ட சம்பவமல்லவென்றும், நாடு விஸ்தரிக்கும் ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியேயாகுமென்றும் மன்னர் கூறினர்.

**இஸ்ரேல் மந்திரி அளித்த பதில்**

இஸ்ரேல் வெளியுறவு மந்துரி திரு. எபான் பேசுகையில், இஸ்ரேல் நிலைகளை ஜோர்தானே முதலில் தாக்கியதாகவும், அப்படித் தாக்கியிராவிடில், இஸ்ரேலின் எதிர்த்தாக்குதலை அதுஎதிர் நோக்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்றும் கூறினர்.

இஸ்ரேலை முற்றாக அழிப்பதற்காக ஐ. அ. குடியரசின் இராணுவத் தளபதிகள் தயாரித்த திட்டங்களடங்கிய படங்களும், புள்ளி விபரங்களும் தம் கைவசமுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**வாபஸ் பெற முடியாது**

இஸ்ரேல் தனது துருப்புகளைப் போருக்கு முந்திய நிலைகளுக்கு வாபஸ் பெறுவது என்பது இயலாத காரியம் என்று கூறிய திரு. எபான், ''எவ்வித சமாதான உடன்படிக்கையுமின்றி, துருப்புகளை வாபஸ் பெறுவது, மற்றுமொரு போருக்கு அடிகோலும் முதல் நடவடிக்கையாகவே அமையும்'' என்றார்.

**நேபாள தூதுவர் பேச்சு**

நேபாளத் தூதுவர் பேசுகையில், இஸ்ரேலும் அரபு நாடுகளும் சந்தித்துப்பேசித் தமது தகராறுகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவக இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடாகக் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. ஆனால் இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று அவர் கூறினர். 'பிழையான நோக்கங்களைக் கொண்ட தவருன போர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென்று அவர் வல்லரசுகளை எச்சரித்தார்.

**அகதிகள் உதவிக்கு அவசர கோரிக்கை**

ஐ. நா. பொதுச்சபையின் தலைவர் விவாதத்தின் ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு, அரபு அகதிகளின் உதவிக்காக நிதி தருமாறு சபையிடம் ஓர் அவசரமான வேண்டுகோள் விடுத்தார்.

---

## கியூபாவில் கொஸிஜின்

ஹவானா, ஜூன் 27

நியுயோர்க்கிலிருந்து புறப்பட்ட ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின், நேற்று கியூபாவின் தலைநகரான ஹவானா வந்து சேர்ந்தார். கியூபாவின் அதிபர் திரு. பிடெல் காஸ்டிரோவை அவர் சந்தித்துப் பேசுவார்.

நியுயோர்க்கிலிருந்து புறப்பட முன்னர், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதுடன், அதன் துருப்புகளையும் வாபஸ்பெறுமாறு ஐ. நா. சபை இஸ்ரேலைக் கேட்டுக்கொள்ளுமெனத் தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

---

# ஏர் இந்தியா விமானிகள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்

புதுடில்லி, ஜூன் 27

ஏர் இந்தியா விமானிகள் இன்று காலை 5-30 மணிக்கு வேலைநிறுத்தத்தில் இறங்கினர். இந்த வேலைநிறுத்தம், விமானிகள் சங்கத்தினுல் அழைக்கப்பட்டுள்ளது.

இந்தியன் ஏர் லைன்ஸ் விமானிகளுக்கும், ஏர் இந்தியா விமானிகளுக்குமிடையே நிலவும் ஊதிய வேற்றுமைகளே இவ்வேலை நிறுத்தத்துக்கான முக்கிய காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானிகளின் பிரச்னையைத் தீர்க்க எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்ததால், அவர்களுடைய தகராறைத் தீர்க்க, தொழில் தகராறுச் சபையிடம் சமரசத்துக்காக விடுவதென அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனுல் ஏர் இந்தியா விமானிகள் இந்தச் சமரச ஏற்பாட்டுக்கு உடன்பட மறுத்துவிட்டார்கள். விமானிகள் சங்கத்தின் வேண்டுகோளின்பேரில், ஏர் இந்தியா விமானிகள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

---

# சீன - பாகிஸ்தான் சதி வேலைகள்

## அவசரகாலநிலையை நீடிக்ககாரணம்

### சவான் அறிவிப்பு

புதுடில்லி. ஜூன் 27

அடுத்தமாதம் முதற் திகதிக்குப் பின்னரும் நாட்டில் அவசரகால நிலையைத் தொடர்ந்து நீடிப்பதென்ற அரசாங்கத்தின் முடிவை இந்திய உள்துறை மந்திரி திரு. சவான் நேற்று லோகசபையில் ஆதரித்து வாதாடினர்.

நாட்டிலுள்ள உள்ளூர்ப் பிரச்னைகளினுல் அவசரகால நிலை நீடிக்கப்படவில்லையென்றும், இந்தியாவின் பாதுகாப்பை முனிட்டே அது நீடிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சவான் வலியுறுத்தினர்.

அண்மையில் சீனவும் பாகிஸ்தானும் தனியாகவும் ஒருமித்தும் இந்தியாவுக்கெதிரான நாசகாரச் சதிவேலைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறிய திரு. சவான், இக்காரணத்தை முன்னிட்டே அவகரகால நிலையை நீடிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக தெரிவித்தார்.

அவசரகாலநிலைச் சட்டங்கள் பெரும்பாலும்நாட்டின் எல்லைப்பகுதிகளிலேயே அமுலாக்கப்படுமெனவும் திரு. சவான் அங்கத்தவர்களுக்கு உறுதியளித்தார். நிலைமை எதிர்வரும் நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்தில் புனராலோசனை செய்யப்படுமெனவும் அவர் கூறினர்.

எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பலர் அவசரகாலநிலை நீடிக்கப்படுவதை எதிர்த்துப் பேசினர்கள். அவசரகால நிலையை எடுத்துவிட வேண்டுமென்ற எதிர்கட்சியின் பிரேரணை ஒன்று வாய்மொழி வாக்கெடுப்பின் மூலம் சபையில் தோற்கடிக்கப்பட்டது.

---

# 'சமாதானத்துக்கு தம்மை அர்ப்பணித்துள்ள மனிதர்'

## கனடா கவர்னர்-ஜெனரல் சாகிர் ஹுசெயினுக்குபாராட்டு

ஒட்டாவா, ஜூன் 27

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர்ஹுசெயின், தமது 6 நாள் கனடா விஜயத்தில் நேற்று ஒட்டாவா வந்து சேர்ந்தார். ஒட்டாவாவில் அவருக்கு அன்பு கலந்த உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்திலிருந்து கனடா பார்லிமெண்ட் இல்லத்துக்கு அவர் மோட்டார் ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவரைக் கனடாகவர்னர் ஜெனரல் திரு. மிச்சினரும், பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்சனும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்றனர்.

கவர்னர் ஜெனரல் திரு. மிச்சினரின் வற்வேற்புரைக்குப் பதிலளித்துப் பேசுகையில், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, இந்தியாவுக்கும் கனடாவுக்குமிடையே நிலவும் சௌஜன்ய உறவுக்கு அடையாளமாக விளங்குவதாக டாக்டர் ஹுசெயின் குறிப்பிட்டார்.

**கனடாவுக்கு பாராட்டு**

நாடுகளிடையே பரஸ்பர நல்லுறவு வேண்டுமென்றும், உலகிலுள்ள செல்வம் கொழிக்கும் நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையேயான வித்தியாசம் வளர்ந்துவருவதாகவும் கூறிய இந்திய ராஷ்டிரபதி, அந்த வித்தியாசத்தை ஒழிக்கச் சகல நாடுகளும் தயாரான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இன, நிற வேற்றுமைகளின்றி எல்லா மக்களையும் சமமாக நடத்த அரசாங்கங்கள் முன்வரவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார். இந்த விஷயங்களில், ஐ. நா. வின் பங்கினை வலியுறுத்திய ராஷ்டிரபதி, கனடா ஆற்றி வரும் பணியினைப் போற்றினர். ஏறத்தாழ இந்தியாவின் நிலையையே கனடா இவ்விஷயங்களில் அனுசரித்து வருவதாகவும் அவர் கூறினர்.

**கவர்னர் ஜெனரல் பேச்சு**

சமாதானத்துக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள ஒரு மனிதரை வரவேற்பதில் தாம் மகிழ்ச்சியடைவதாகக் கனடா கவர்னர் ஜெனரல் திரு. மிச்சினர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

அத்துடன் மனித கௌரவத்தையும், ஜனநாயகத்தையும் மதிக்கும் ஒரு நாட்டிலிருந்து டாக்டர் ஸாகீர் ஹுசெயின் வந்துள்ளதாகத் திரு. மிச்சினர் மேலும் கூறினர்.

கனடாவின் சர்வதேச பொருட்காட்சியான 'எக்ஸ்போ-67'ல் இந்திய அரங்கை திரு. மிச்சினர் வெகுவாகப் பாராட்டினர்.

'இந்தியா இச்சர்வதேசப் பொருட்காட்சியில் பங்குபற்ருமலிருந்திருந்தால், அது பூரணமாக அமைந்திராது' என்று அவர் குறிப்பிட்டார்.

**மொண்ட்ரீல் செல்கிருர்**

டாக்டர் சாகீர் ஹுஸெயின், இன்று ஒட்டாவாவிலிருந்து 'எக்ஸ்போ-67' பொருட்காட்சி நடக்கும் நகரான மொண்ட்ரீல் செல்கிருர். அங்கு அவர் 'இந்தியா வார'த்தைத் தொடக்கி வைப்பார்.

---

# ருமேனிய பிரதமர் ஜோன்சனை சந்தித்தார்

வாஷிங்டன், ஜூன் 27

ருமேனியாவின் பிரதமர் திரு. மரோ, நேற்று அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடாத்தினர். ஜோன்ஸனின் அழைப்பின் மீதே, இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பேச்சு வார்த்தைகளின் இறுதியில், தானும் ஜோன்ஸனும் பல முக்கிய பிரச்னைகளை விவாதித்ததாக ருமேனியப் பிரதமர் அறிவித்தார்.

மேற்கு ஆசிய விவகாரத்தில் ஒரு தீர்வுக்கான சில ஆலோசனைகளை ருமேனியப் பிரதமர் திரு. மரோ, ஐ. நா. சபையில் வெளியிட்டிருந்தார். இந்த ஆலோசனைகள் ஒரு சமரச உடன்படிக்கைக்கு வழி வகுப்பதாக அமெரிக்க ஜனதிபதியின் கவனத்தைக் கவர்ந்திருந்தன.

ஆகவே தான், ருமேனியப் பிரதமருக்கும், அமெரிக்க ஜனதிபதிக்குமிடையேயான பேச்சுவார்த்தைகளுக்கு இங்குள்ள பார்வையாளர்கள், விசேஷ முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

---

## எந்திரக் கருவிகள் தொழிற்சாலை தமிழகத்தில் நிறுவப்படும்

சென்னை, ஜூன் 27

தமிழகத்தில் எந்திரக் கருவிகள் தொழிற்சாலைஒன்றை அமைக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக ராஜ்ய தொழில் மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் கீழ் சட்டசபையில் பேசுகையில் தெரிவித்தார்.

இத் தொழிற்சாலை, ராஜ்ய தொழில் ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்படுமெனக் கூறிய அவர் இதற்கு ரூ.2 கோடி செலவாகுமெனவும் ஜப்பான் ஒத்துழைப்புடனே இது நிறுவப்படுமெனவும் தகவல் தெரிவித்தார்.

தொழிற்சாலைக்கான லைசென்ஸை தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினர்.

---

## பதில் போதனசிரியர்

புன்னலைக்கட்டுவன், செவ் உரும்பராய் இந்துக்கல்லூரி பதில் விவசாயப்போதனசிரியராக திரு. சீ. மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இக் கல்லூரிப் பழைய மாணவராவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சுயநலத்தையிட்டு 'எனது' என்பதற்குப் பதிலாக 'உமது' என்ற அடிப்படையில் எண்ணும்போதுதான் தெய்வீகக் காட்சியைக் காண முடியும். உண்மையில் வாழ்க்கையின் ஒருமைப்பாட்டையும் உணரவும் முடியும்.

—தவநெறிச் செல்வர் இராமச்சந்திரா.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

அகப்பரணம் பிலவங்க ஹூ ஆனி மீ 14 உ ('28 6-67)

# கிளாஸ்பரோ சந்திப்பு

வியட்நாம், மேற்கு ஆசியா போன்ற பெரும் நெருக்கடியான விஷயங்களில் உடன்பாடு எதுவும் ஏற்படாமல் அமெரிக்க அதிபர் ஜோன்சனுடன் 'பயனுள்ள சந்திப்பை' முடித்துக் கொண்டு சோவியத் பிரதமர் கொஸிஜின் நியூயோர்க்கிலிருந்து புறப்பட்டிருக்கிறார்.

அமெரிக்க அதிபர் ஜோன்சனும் சோவியத் பிரதமர் கொஸிஜினும் கிளாஸ்பரோ நகரில் இரண்டுதடவைகள் சந்தித்து சுமார் பத்துமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். அமைதியான, சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளில் வடக்கு வியட்னும் மீது அமெரிக்கா குண்டு வீசுவதை நிறுத்துவது பற்றியோ, மேற்கு ஆசியாவில் நடந்த யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப்பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர்கள் வாபஸ்பெறுவது பற்றியோ இருவருக்குமிடையில் உடன்பாடு ஏற்படவில்லை. அதாவது இருதரப்பினரும் தங்கள் 'பிடியை' விடவில்லை.

ஆனல் ஸ்டாலின் புதல்வி ஸ்வெட்லானு மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவில் வந்து தஞ்சம் புகுந்ததனுலும் ஜப்பானிய கடலில் அமெரிக்க — சோவியத் நாசகாரிக் கப்பல்கள் மோதிக்கொண்டதனுலும், வடக்கு வியட்னும் துறைமுகம் ஒன்றில் சோவியத் சரக்குக்கப்பல் ஒன்றின்மீது அமெரிக்க போர் விமானம் குண்டுவீசியதனுலும் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஏற்பட்டுவந்த நெருக்கடி குறைந்து மீண்டும் இருநாடுகளுக்குமிடையில் வேற்றுமை அதிகரித்து பகைமை வளரக்கூடும் என்ற அச்சம் தோன்றியது. ஆனல் கிளாஸ்பரோ சந்திப்பு அமெரிக்க — ரஷ்ய பகைமை உணர்ச்சியைத் தணித்து ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கான முயற்சிக்கும் உதவியிருக்கிறது. இந்தவகையில் இது பயனுள்ள சந்திப்புத்தான்.

வேறு முக்கிய விஷயங்களில் அமெரிக்க அதிபருக்கும் சோவியத் பிரதமருக்கும் உடன்பாடு ஏற்படவில்லையெனினும் அணு ஆயுதபரவலை தடுக்கவேண்டுமென்பதில் கொள்கையளவில் இருதரப்பினருக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. சீனவும் ஓர் அணு வல்லரசாக வளர்ந்து வருவதும் அமெரிக்க, ரஷ்ய தயவை எதிர்பார்த்திராது பிரான்சும் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதுமே அமெரிக்க-ரஷ்ய உடன்பாட்டிற்குக் காரணம் என்று கூறலாம்.

ஜோன்சன் — கொஸிஜின் சந்திப்பு பெரியவிஷயங்களில் உடன்பாட்டை ஏற்படுத்தவில்லையாயினும் இதுபோன்ற சந்திப்புகள், நாடுகளுக்கிடையிலும் வல்லரசுகளுக்கிடையிலும் பகைமை உணர்ச்சியைக் குறைத்து நட்புறவையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க முயற்சி செய்ய முடியுமென்பதற்கு வழி காட்டியிருக்கின்றன.

## சமய சமரசம்

கல்கிசையிலுள்ள ஒரு கல்லூரியில் இரண்டு வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கடி நிலையைச் சமாளிக்க பொலிசாரை அழைக்கவேண்டியேற்பட்டதாம். வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் ஒரு கல்லூரியில் இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்திருப்பது துரதிர்ஷ்டவசமானதும் கவலையளிப்பதுமாகும். இக் கல்லூரியில் இதுபோன்ற சம்பவம் இப்போதுதான் முதல்தடவையாக நிகழ்ந்திருப்பதால் இதை முளையிலேயே கிள்ளிவிட கல்லூரி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதம் 'மதமாகி' வெறியாகிவிடக்கூடாது. மதத்தையும், அரசியலையும் வைத்துப்பிழைத்தகாலம் போய்விட்டது ஆன்மீகமும், விஞ்ஞானமும்தான் இன்றைய வாழ்க்கை. ஆன்மீகம் மக்களை ஐக்கிப்படுத்துவது. பாசாலைகளிலும் கல்லூரிகளிலும் சமய சமரசத்தை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தையே இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

# சமரச ஞானக்கோவை

**— கி. வா. ஜகந்நாதன் —**

**திரு. க. இராமச்சந்திரன் ஆக்கிய 'சமரசஞானக் கோவை' வெளியீட்டுவிழா இன்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நூல் பற்றி 'கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் கூறுவதை இங்கு காண்க.**

இன்று உலகம் முழுவதும் விஞ்ஞானத்தின் பெருமையைப் பாராட்டிப் பேசுகிறது. இந்த விஞ்ஞானத்தில் பல வகைகள் இருக்கின்றன. நாளாக ஆக ஒவ்வொருவகையும் விரிந்து பரந்து, பல கால்களாகப் பிரிந்து செல்கின்றன. இந்த விரிவுக்கு எல்லையே இல்லையென்று தோன்றுகிறது ''அறிதோறறியாமை கண்டற்றால்'' என்ற திருக்குறளின் பொருட்சிறப்பு இப்போது நன்ருக விளங்குகிறது. எத்தனையோ புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் தாம்காண்பதற்குரியவை இன்னும் பலப்பல என்று கூறுகிருர்கள்.

புறப்பொருள்களை ஆராய்ந்து பூதங்களின் அமைப்பினுள் நுழைந்து யோசித்து மேகமண்டலத்தையும் கடந்து வெளியூடே சென்று உலாவி, எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்துகின்ருர்கள், விஞ்ஞானிகள். அவ்வளவும் சடப்பொருள்களின் ஆராய்ச்சி எல்லாம் வெளிமுகச்சோதனை. அவற்றை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனல், விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகளை உலகம் அறிந்து பாராட்டுவதற்குமுன்பே மெய்ஞ்ஞான ஆராய்ச்சி பாரத நாட்டில்நிகழ்ந்தது. சித்துப் பொருளைப்பற்றிய ஆராய்ச்சியாக, உண்முகச் சோதனையாக விளங்கிய அந்த மெய்ஞ்ஞான ஆராய்ச்சிக்குரிய ஆய்வுக்கூடமாக இந்தப் பாரதநாடு விளங்கியது. இந்த ஆய்வுகள் கண்டுபிடித்த உண்மை முடிந்த முடிவாக இருக்கிறது அதை மாற்றிச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அந்த உண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்து அதனுல் வரும் இன்பத்தை நுகர்வதே நம்முடைய கடமையாகும்.

பரமார்த்திக வாழ்வை வேதகாலமுதல் இந்தநாடு அறிந்து உலகமக்களுக்கும் போதித்துவருகிறது. அவ்வாறுவாழ்ந்தவர்கள் அனுபூதிமான்களாக இருந்து வந்திருக்கிருர்கள் இன்றும் இருந்துவருகிருர்கள். இனிப் புதியதாக உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்பது இல்லை. கிடைத்த உண்மையை உணர்ந்து அனுபவம் பெறுதற்குரிய நெறியில் நம்மை செலுத்துவதற்கு வேத முதலாய மெய்ஞ்ஞான நூல்கள் வழிகாட்டுகின்றன. உண்மையை உணர்த்தும் நூல்களைச் சாத்திரம் என்று சொல்லுகிருேம்.

வடமொழியாலும் தென்மொழியாலும் பல சாத்திரங்கள் தோன்றியுள்ளன. உபநிடதம் முதல் சிவஞான சித்தியார் வரையில் சாத்திரங்கள் அளவுக்கு அகப்படாமல் எழுந்திருக்கின்றன. உண்மையை உணர்ந்த ஞானியர்கள் தம் அனுபவ நிலையில் நின்றுஅந்த ஆனந்த அதிசயத்தால் பாடிய தோத்திரங்கள் பல இருக்கின்றன அவற்றை அப்பெரியார்கள் ஆனந்தவிருந்துண்டதனுல் வந்த ஏப்பம் என்று சொல்லலாம்.

சாத்திரங்கள் அறிவுக்கு தெளிவு தருபவை; தோத்திரங்கள் உணர்வை வளர்த்து அனுபவத்துக்கு வழிகூட்டுபவை. இந்த இரண்டு வகையிலும் அமைந்த வடமொழி தென்மொழி நூல்கள் பலப்பல.

இவற்றையெல்லாம் தெரித்துகொள்வதன் பயன் நாமும் இந்தப் பரமார்த்திக நெறியில் வாழ முயல்வதே. அன்பைப்பிடித்துக்கொண்டு தூய்மையை வளர்த்து இறைவனுடைய அருளுக்காக ஏங்கி வாழும் வாழ்விலே தலைப்படவேண்டும்.

இறைவனை உருவமுடைய வனுகவைத்து அவனுடைய அருள்விளையாடல்களின் தத்துவத்தை உணர்ந்து வழிபடவேண்டும். உன் முகத்திலே விளக்காகவும் சுடராகவும் சோதியாகவும் வளம்படி தியானித்து அமைதியான மோன இன்ப வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்க வேண்டும்.

[illegible] கட்டுரைகளை இந்தக் கட்டுரைக் கோவை தருகிறது. இந்தக்கட்டுரைகளின் அடி நாதமாக இருப்பது சமரசம்; அதன்மேல் எழும்பும் இசை அன்பு; அதனுல் விளையும் இன்பம் உபசாந்த நிலை.

இதன் ஆசிரியர் வடமொழி நூற்கருத்துகளை நன்கு உணர்ந்தவர். தமிழ் சமய சாத்திர தோத்திரங்களில் தோய்ந்தவர். உலகத்து ஞானியர் பலருடைய அருள் மொழிகளைப் பயின்றவர். சமய வாதியாக வாழ்வது பயன்அற்றது என்பதை உணர்ந்து சமயவாணராக வாழமுற்பட்டவர்.

சமயத்தை வாதப்பொருளாக்குவதால் வேறுபாடும், பிரிவு மனப்பான்மையும், விருப்பு வெறுப்பும், அகந்தையுமே உண்டாகும். அதை வாழ்வதற்குரிய வழியாக்கிக் கொண்டால் அறிவிலே தெளிவு உண்டாகும், உணர்விலே உணர்ச்சி உண்டாகும், உயிரிலே அருட்பதிவு ஏற்படும்.

முற்கால ஞானியர் வரலாறுகளையும் வாய்மொழிகளையும் உணர்ந்ததோடன்றி இக்கால ஞானியர்களின் தொடர்பும் அவர்களுடைய வாய்மொழிகளில் அறிவும் உள்ளவர் திரு. இராமச்சந்திரனர். உலகத்து ஞானியருடைய உபதேசங்களில் ஒருமைப்பாட்டைக் காண்கிறவர், வடமொழி, தென்மொழியிடையே பொதுமையைப் பார்க்கிறவர். வேதாந்த சித்தாந்தங்களின் ஒப்புமையைத் தெரிந்தவர். இந்தப் பண்புகளையெல்லாம் இந்தச் சமரச ஞானக்கோவையிலுள்ள கட்டுரைகள் காட்டும்.

திருமூலர் திருமந்திரத்தையும், சிவஞான சித்தியாரையும், குமரகுருபரர் திருவாக்கையும், தாயுமானவர் பாடலையும், அருட்பாவையும் நன்கு ஓதித் திளைத்த உள்ளத்தில் எழுந்த சமரச அலைகளின் ஒலியை இவற்றிற் கேட்கிருேம். பகவத்கீதையையும், பாரதத்தையும், உபநிடதங்களையும் மதிப்புடனறிந்த விரிவான அறிவின் ஒளியை இவற்றிற் காண்கிருேம். லலிதா சகசிர நாமத்தையும், சௌந்தரிய லகரியையும், அபிராமி அந்தாதியையும் ஆழ்ந்து உணர்ந்து நுழைந்து எடுத்த முத்துக்களையும் பார்க்கிருேம்.

வேதாந்தமும் சித்தாந்தமும் கைகோர்த்து நடமாடுன்றன, இந்தக் கட்டுரைகளில். சிவனும் முருகனும், அம்பிகையும் கண்ணனும் குலாவுகிருர்கள். மணிவாசகரும் சங்கரரும், சமணரும் சிவானந்தரும் தம்முடைய குரலைக் காட்டுகின்றனர். கந்தன் காட்டும் விசுவரூபமும், கண்ணன் காட்டும் விசுவரூபமும் அருகருகே நின்று காட்சியளிக்கின்றன

சரித்திர ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளையும் பிறநாட்டுத் தத்துவ நூல்களிற் கண்ட கருத்துக்களையும், விஞ்ஞானிகள் கூறும் பொருள்களையும் அங்கங்கே பொருத்தமாகக் காட்டுகிருர் ஆசிரியர்.

சங்கராச்சாரியார் எல்லா மதங்களுக்கும் உரம் கொடுத்தவர் என்பதும் பகவத்கீதை உலகத்துக்கே வழிகாட்ட வந்த நூலென்றும் நம்புகிறவர் இவ்வாசிரியர். அறத்தின் வகையை உறுதியுடன் எடுத்துக்கூறும் திருக்குறளையும் அன்பின் கொழுந்தாக நிலவும் திருவாசகத்தையும் தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறவர்.

எதையும் தெளிவாகவும் யார் உள்ளமும் புண்படாத வகையிலும் நடுநிலையான பார்வையுடனும் சொல்லத் தெரிந்தவர் இவ்வாசிரியர். சக்தி வழிபாடு எவ்வாறு பழங்கால முதல் உலகம் முழுவதும் இருந்து வருகிறது என்பதை பல மேற்கோள்களுடன் காட்டியிருக்கும் பகுதிகள் அறிந்து போற்றுதற்குரியன. ''அன்னையின் பாதத்தை முத்தமிடுகிறவன் அசாதாரணத்துக்

[5-ம் பக்கம் பார்க்க]

## நாடும் நடப்பும்

ஓர் இளைஞன்; வயது 22. ''உலகம் வெறுத்துவிட்டது'' என்று எழுதி வைத்துவிட்டு, கிருமிநாசினி அருந்திவிட்டான். அவன் நினைத்த மாதிரி, அவன் உயிர் உபத்திரவம் இல்லாமல் பிரிந்துவிடவில்லை. ''சாவதென்ருல் சாவதென்ன லேசாமோ!'' அவனை உறவினர் அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். கிருமிநாசினி வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. குடலைப் பிய்த்துப் பிடுங்கி சித்திரவதை செய்கிறது. ''ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று இரு கரங்களையும் உயர்த்திக் கதறுகிருன். அவனைக் காப்பாற்ற எல்லோருக்கும் விருப்பம் தான். ஆனல்...

கிருமிநாசினி தனது வேலையைச் செய்துமுடித்துவிட்டது.

உலகம் வெறுத்துவிட்டது என்று எழுதிவைத்தவன் அந்த உலகத்தில் மீண்டும் வாழ நினைத்தான் முடியவில்லை. இதுதான் விதியா?

மற்ருேர் இளைஞன் தனது சகோதரியின் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழனுக இருந்து மணவறையை அலங்கரிக்க வேண்டியவன், திருமணத்தன்று மரத்தில் தொங்கி உயிர்விட்டுவிட்டான். சகோதரியின் திருமணத்தின்போது நைலோன் ஷேர்ட் அணிந்திருக்கவேண்டுமென்றும், மோதிரம் அணிந்திருக்க வேண்டுமென்றும் ஆசைப்பட்டான். அந்த ஆசையை நிறைவேற்றக்கூடிய நிலையில் அவன் தந்தை இருக்கவில்லை.

ஆசை அவனைப் பலி கொண்டுவிட்டது. திருமண வீடு...

கடன் தொல்லை தாங்க முடியாமல் மற்ருேர் இளைஞன் சில தினங்களுக்குமுன் கிருமிநாசினியைத் துணைகொண்டு உயிர்விட்டான்.

கிருமிகளை அழிக்க வந்த மருந்து, மனிதரை இப்படி அழித்துக்கொண்டே போகிறதே! இதற்கு ஒரு முடிவு காணமுடியாதா?

அம்மா ஏசிவிட்டாள், அப்பா கடிந்துகொண்டார் என்பதற்காகவும், பரீட்சையில் சித்திபெறவில்லையென்பதற்காகவும், சினிமாவில் வரும் நட்சத்திரங்களைப் போல் ஆடைஅணியமுடியாதிருப்பதற்காகவும் மற்றும் இதுபோன்ற அற்ப விஷயங்களுக்காகவும் இந்நாளில் இளைஞர்கள் உயிரை மாய்த்துக்கொள்கிருர்கள்.

உயிரைப் போக்கிக்கொள்வதற்குச் சுலபமாக நச்சுப் பொருள்கள் கிடைத்துவிடுவது ஒன்று.

மற்றது, உயிரின் பெறுமதியையும், உலகில்சாதிக்க வேண்டிய பெரும் பணிகளையும் இளைஞர் அறியாமலிருப்பது.

சினிமா தான் வாழ்க்கை என்ற அளவுக்கு இளைஞர் ஊறிப்போயுள்ளனர். பெரியவர்களிலும் சிலர் இப்படியிருக்கையில் இளைஞர்களைத் திருத்துவது எப்படி?

—ஊர்சுற்றி

# வடபகுதிக்கு தமிழ் விஞ்ஞான ஆலோசகர்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

வடமாகாண விஞ்ஞான ஆசிரியரின் சங்கச்செயற்குழு கல்வியமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஜீ. பெரேராவைப் பேட்டி கண்டபோது அவர் வடமாகாணத்துக்கு ஒரு தமிழ்விஞ்ஞான ஆலோசகரை நியமிப்பதுபற்றியும் பொதுத்தராதரப்பத்திர [சாதாரணம்] மாணவருக்கு தேவையேற்படின் மேலதிக ஆய்வு கூடங்கள் அமைப்பதுபற்றியும் கூடிய விரைவில் கூடுதலான விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது பற்றியும் வடபகுதியிலுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியைத் தரமுயர்த்துவதுபற்றியும் கூடுதலான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பது பற்றியும் தான் கவனிப்பதாக வாக்களித்துள்ளார்.

## தமிழக ராஜ்ய மேல் சபையில்

சென்னை, ஜூன் 27

எண்ணெய்எண்ணெய்வித்துக்கள், சர்க்கரை ஆகியவற்றின் விலைகளைக்குறைக்க அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத்தமிழக ராஜ்ய உணவுமந்திரிதிரு. மதியழகன் அறிவித்தார். முதல் மந்திரிஇது பற்றிப்பரிசீலனை செய்வதாகவும் அவர் கூறினார்.

**மதுரை பல்கலைக்கழகம்**

மதுரைப்பல்கலைக்கழகம், அதன்சட்ட திட்டங்களை மாற்றியமைக்க விருப்பதாக கல்விமந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார். சென்னை, அண்ணாமலைப்பல்கலைக் கழகங்களின் சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்கும் யோசனைஎதுவும் இப்போதில்லை என்றும் அவர் கூறினார்.

**சூப்பர்மார்க்கெட்**

தமிழகத்திலுள்ள சூப்பர் மார்க்கெட்டுகள் நஷ்டத்தில் நடப்பதாகவும், அவற்றை நீக்கிவிடவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்ட யோசனையை சட்ட கூட்டுறவு மந்திரி திரு. எஸ். மாதவன் நிராகரித்து விட்டார். தமிழகத்திலுள்ள மொத்தம் 5சூப்பர் மார்க்கெட்டுகளில் கோயம்புத்தூர் மதுரை ஆகிய இருஇடங்களிலுமுள்ள சூப்பர்மார்க்கெட்டுகளே நஷ்டத்தில்நடப்பதாகவும், நஷ்டத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்குமாறு தான் அதிகாரிகளைக் கேட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**ஆபாச சுவரொட்டி**

ஆபாசசினிமா விளம்பரம், சுவரொட்டிகள் நகரில்காட்சியளிப்பது பற்றிபிரஸ்தாபிக்கப்பட்டபோது ஆபாசம் எது என்பதை வரையறை செய்யும் சட்டம் இல்லாதபடியாலேயே தகுந்த நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கிறதுஎன ஹரிஜனநல மந்திரி திருமதி சத்தியவாணிமுத்து விளக்கம் கொடுத்தார். ஆபாசசுவரொட்டிகள் விஷயத்தில் கவனம் செலுத்தும்படி பொலிசார் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

கொம்பனித்தெரு, செவ்.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. சாதாரண தர பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 33 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் பாடசாலைப் பரீட்சார்த்திகளின்தொகை இன்னும் கணக்கிடப்படவில்லையென்றும் இவர்களின் தொகை ஒரு லட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாமென்றும் பரீட்சைப்பகுதி வட்டாரத்தில் கூறப்பட்டது.

## கட்டிடம் இடிந்து ஒருவர் பலி

கொம்பனித்தெரு, செவ்.

கொழும்பு ஐந்துலாம்பு சந்தியில் மாடிக்கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டார். மற்றொருவர் மண்டை நசுங்குண்டு ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் இறந்த ஏ. எஸ். எம். ஷம்சுதீனின் மரண விசாரணையின்போது விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆபத்து நிலையிலுள்ள ஆர். எம். ஜெய்னுதீனும் இறந்தவரும் பழைய சாமான்கள் வாங்கி விற்று வந்தனர்.

## மட்டுவிலில் வள்ளுவர்விழா

மட்டுவில், செவ்வாய்

நுணுவில், மட்டுவில் தெற்கு இளைஞர்முன்னேற்ற கழகத்தினர் வள்ளுர்வ விழா கொண்டாடவிருக்கின்றனர். மட்டுவில் சரசுவதி வித்தியாலயத்தில் இம்மாதம் 29-ந் திகதி நடைபெறவிருக்கும் இவ் விழாவிற்கு வித்துவான் மு. சபாரத்தினம்தலைமைவகிப்பார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. பொன்னம்பலம், திரு. ஏ. இளஞ்செழியன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## மகோற்சவம்

இணுவில், செவ்.

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமிகோவில்மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. ஜூலை 7-ம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தமும், 9-ம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறும்.

## சேக்கிழார் நினைவு விழா

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் ஆசிரியகலாசாலை இந்து மாமன்றத்தின் சார்பில் சேக்கிழார் நினைவுவிழா கொண்டாடப்பட்டது. கூட்டுப்பிரார்த்தனையுடன்ஆரம்பமான இவ் விழாவுக்கு சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தலைமை வகித்தார்.

தொண்டரின் பெருமைகளைப் பக்திச் சுவை சொட்டப்பாடித் தந்த சேக்கிழார் பெருமானை நினைந்து மகிழ்ச்சியடைவதோடு மட்டும் நின்றுவிடாமல் பெரிய புராணத்தைப் பொருள் உணர்ந்து படிக்க வேண்டும் எனத் தலைவர் குறிப்பிட்டார்.

திரு. கே. துரைசிங்கம், திரு. க. இரத்தினசபாபதி ஆகியோரும்பேசினர். திரு. கே ஐயாத்துரை பக்திப்பாடல்கள் பாடினர்.

## புகார் புத்தகம் எங்கே? எம் பி கேட்கிறார்

சங்கானை, ஞாயிறு

இம்மாதம் 19ம் திகதி காழ்'பஸ்நிலையத்தில் பிரயாணிஒருவருக்குபுகார்புத்தயம்கொடுக்க மறுத்ததுடன் புகார் செய்யச்சென்றவரை அவமதித்ததாகக்கூறப்படும் சம்பவம்பற்றி உடன் விசாரணைநடத்தும்படியும் புகார் புத்தகம் ஏன் பஸ் நிலையக் காரியாலயத்தில் வைக்கப்படவில்லை என்பதற்கான காரணத்தை தனக்குத் தெரிவிக்கும்படியும் கேட்டு வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் இ. போ. ச. பிராந்திய முகாமையாளருக்கு எழுதிய கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

## உபகரணம் வாங்க நிதி

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்றார்-ஆசிரியர் சங்கத்தினர் ஒரு கதம்ப நிகழ்ச்சியை நடாத்தி இதில் கிடைத்த பணம் கல்லூரி உபகரணங்கள் வாங்கப் பயன்படுத்தப்படுமாம்.

டோக்கியோ, ஜூன் 26

இலங்கை பிரதமமந்திரி இன்றுஜப்பான் தலைநகரான டோக்கியோநகர் வந்துசேர்ந்தார்.

ஜப்பான் பிரதம மந்திரியும் வெளிநாட்டு மந்திரியும் அவரை வரவேற்றார்கள்.

## பாடசாலை நாட்கள் அதிகரிப்பது பற்றி ஆசிரியர் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

''வட இலங்கைத்தமிழாசிரியர் சங்கமும் எமது சங்கமும் ஒன்று சேர்வது பற்றி சென்ற வருடம் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்ந்துநடைபெற்றன. இரு சங்கங்களினது உபகுழுக்கள் ஒன்று கூடி கருமமாற்றி ஒன்று சேருவது சம்பந்தமாக ஆலோசித்தனர். தமது தாய்ச் சங்கமாகிய அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், சங்கங்களை மொழிவாரியாக இணைப்பதாகவே தீர்மானித்துள்ளதாக வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினர் தெரிவித்தார்கள். ஆனால் இந்நிலை இலங்கையிலுள்ள மூன்று ஆசிரியர் சங்கங்களானதேசியஆசிரியர்சங்கம், அகிலஇலங்கை தமிழாசிரியர் சங்கம், ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்கம் என்பன ஒன்றுபட வேண்டும் என்ற எகது சங்கத்தின் விருப்பத்திற்கு முரண்பாடாக உள்ளதென எமது நிருவாகசபை கருதுகின்றது எட வடமாகாண ஆசிரியர் சங்க 52-வது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

போதனமொழி தாய்மொழியாகவே இருக்க வேண்டுமென்று எமது தீர்மானத்தின் அடிப்படையில் எமது கருத்தை தேசிய ஆசிரியர் சங்கத்தினூடாக வெள்ளையறிக்கை பற்றி நாம் சமர்ப்பித்த மகஜரில் சேர்த்துள்ளோம்.

## சமரச ஞானக்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

குப் போகிறான்'' என்று நபிகள்நாயகம் அருளியதை ஓரிடத்தில் மேற்கோள் காட்டுகிறார். ஆதிசங்கராச்சாரியாரைப் பற்றிக் கூறும்போது ''அந்த மகாபுருஷரை அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர் 'அவர் சைவத்துக்கும் வைஷ்ணவத்துக்கும் செய்த அருஞ்சேவையை அறியாதவர்களாவர். இந்துமதமென்னும் கற்பகதருவுக்குப் புத்துயிர் கொடுத்து, அதன் கிளைகள் மறுபடியும் உயர்ந்தும் விரிந்தும் வளர்ந்து சாந்தநிழல் பரப்பச் செய்தவர் அவரேயாம்' என்று பாராட்டுகிறார். திருமூலரையும், மணிவாசகரையும், இராகிருஷ்ணரையும், விவேகானந்தரையும், ரமணபகவானையும் போற்றி எழுதும் இடங்கள் பெருமக்களிடம் இவருக்குள்ள சிறந்த பக்தியைப் புலப்படுத்துகின்றன.

திருக்குறளையும், பகவத்கீதையையும் அடுத்தடுத்து வைத்துப்புகழுகிறார். ''அறநூல்களுள் மிகச் சிலவே, உலக மக்கள் யாவருக்கும் எக்காலத்தும் எந்நிலையிலும் பயன்படும் சிறப்புப் பொருந்தியவை. இந்த முறையில் தலைசிறந்துவிளங்குவன இரண்டு: ஒன்று தமிழ்த் தாயளித்த திருக்குறள்; மற்றது ஆரியத் தந்தை அருளிய பகவத்கீதை. பாரதநாட்டின் பழம் பெருமை அன்று போல் இன்றும் உலகளாவி நிற்பதற்கு முக்கிய காரணம் இவ்விரு நூல்களேயெனில் மிகையாகாது.''

அந்தந்த மொழிகளிலுள்ள சிறப்புகளை உணர்ந்து காழ்ப்பின்றி அவற்றைப் பாராட்டும் தகைமை இவ்வாசிரியருக்கு இருப்பதை ''ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச்சிறப்புண்டு. தமிழுடன் பக்தியும் இனிமையும் இணைந்திருப்பது போல் வடமொழிக்கு மந்திரசக்தி பொருந்தியுள்ளது'' என்பதனால் கொள்ளலாம். வேதாந்தமும் வைதீக சைவசித்தாந்தமும் உய்வடைவதற்கு ஒரேவித வழிகாட்டிகள் என்பது இவர் கருத்து.

ஓர் அறைக்குள் இருப்பவனுக்கு அந்த அறை தெரியும். வீதியில் வந்து நிற்பவனுக்கு வீதி இருமருங்கும் தெரியும். குன்றின் மேல் ஏறியவனுக்கு மிக விரிந்த நிலப்பரப்புத் தெரியும். இதுபோலவே மனிதன் உள்ளத்தினால் உயர உயர அவனுடைய பார்வை விரியும். எல்லாவற்றையும் நடுநிலைமையில் நின்று பார்க்கும் விரிவு உண்டாகும். உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் சமரச நோக்கோடு எல்லாவற்றையும் பார்ப்பார்கள். அத்தகைய பார்வையை இந்தக் கட்டுரைகளின் வாக்கியங்கள் காட்டுகின்றன. ஆகவே யார் படித்தாலும் விருப்புடன் படிக்கும்வண்ணம் அமைந்துள்ளன இதிலுள்ள கட்டுரைகள்.

தெளிவும் விரிவும்உடைய அறிவே மனிதனை உயர்த்தும். அன்பே அவனுக்கு வளர்ச்சியை உண்டாக்கும். இந்த அறிவும் அன்பும் ஒருங்கிணைந்த உள்ளத்திலிருந்து எழுந்த மணிக்கருத்துக்களை இந்த அழகிய சமரச ஞானக் கோவையிலே காண்கிறோம்.

கோவையை வாழ்த்துகிறேன்! இதனைத் தந்த கோவையையும் வாழ்த்துகிறேன்!!

## "நாகரிக நாரீமணிகளும் வாங்கும்படி தயாரியுங்கள்"

### நெசவு நிலைய திறப்புவிழாவில் அரசாங்க அதிபர்

அச்சுவேலி, செவ்.

''அரசாங்கத்தை ஒரு துணைக்கல்லாக வைத்து கிராமத்தை முன்னேற்ற மக்கள் முன்வரவேண்டும் அரசாங்கம் தனித்துநின்று கிராமங்களை முன்னேற்றும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இப்பகுதி கி. மு. சங்கத்தைதிடகாத்திரம் உள்ளதாக ஆக்கிக்கொண்டு உதவிகள் தேடும்போது அரசாங்கத்தை நாடலாம்''

பத்தமேனி நெசவு நிலையத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

''வேலையில்லாத்திண்டாட்டம் இன்று நம்மத்தியிலிருந்து ஒழியவேண்டுமானால், ஒவ்வொரு பிரஜையும் சுயமுயற்சியில் ஈடுபடவேண்டும். இந்த நெசவு நிலையத்தில் நெய்யப்படும் [illegible]களை நாகரிக நாரீமணிகளும் வாங்கக்கூடியதான முறையில் தயாரிக்கவேண்டும்'' என்று நெசவு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறினார். நெசவு நிலைய வேலைகள் சிரமதானம் மூலம் நடைபெற்றதென்பதைப் பாராட்டினார்.

வலிகிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அச்சுவேலி கி. ச. தலைவர் திரு. எஸ். ரி. சபாரத்தினம், திருவாளர்கள் எஸ். கந்தவனம், கே. பாலசுந்தரம், எம். குமரையா, எஸ். சதாசிவம், க. பொன்னம்பலம், தா சிவலிங்கம் ஆகியோர் பேசினர்.

ஆசிரியர் திரு, ந. சிவபாதம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

## 'ஈழநாடு' வாரமலர் 29-6-67

O இந்திய சுதந்திரப் போராட்டகாலத்தில் தினசரிப் பத்திரிகைகளின் நிலைபற்றி கே. பி. எச். [ஆசிரியர் ஹரன்] எழுதும் யாத்திரைக்கடிதங்களில்இவ்வாரக் கடிதத்தில் சுவைபடக் கூறுகிறார்.

O காலம்மறக்காத கவிஞன் பற்றி பேராசிரியர் சு. சண்முகம் எழுதிவரும் தொடர்கட்டுரையில் பாரதியாருக்கு அவர் மனைவி எழுதிய கடிதமும், மனைவிக்கு பாரதியார் எழுதிய கடிதமும் இவ்வாரம் வெளிவருகிறது.

O எழுத்தாளர்கள் எப்படி எழுதுகிறார்கள்; எப்படிஎழுதத்தொடங்கினார்கள்; அறிவதற்குத்தான் எத்தனை பேருக்கு ஆர்வம். ஈழத்தின் பிரபல எழுத்தாளர் அ. செ. மு. தாம் எழுதத்தொடங்கியதுபற்றி எழுதிய 'பொன்னொளிர் அம்புலி'யை இவ்வாரம் முடித்துவைக்கிறார்.

மற்றும்

**வாழ்க்கைச் சூழல்**

[சிறுகதை]

கே. எஸ். ஆனந்தன்

**அழுகின்ற வசந்தம்**

[கவிதை] நீலாவணன்,

நம் நாட்டுப் பிரமுகர்கள் வரிசையில்

**சுயேச்சைவாதி**

'மயிலன்'

, குடும்பச்சுடர், சிறுவர் உலகு, கலைஅரங்கம், வாரசாரம் — அரசில் நிருபர்— எஸ். எம். ஜி. எழுதும் உலக மேடை ஆகிய வழமையான அம்சங்களும் நாளை 29-6-67 'ஈழநாடு' வாரமலரில் உங்களுக்கு விருந்தளிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு(ம்)புக் கம்பியால் தாக்கினராம

சாவகச்சேரி, செவ்.

''சம்பவத்தினம் தனங்கிழப்பு கடற்கரையில் மீன் பிடித்துவிட்டு வநது நின்றேன் அப்போது முதல் எதிரி இரும்புக் கம்பியுடன் வந்து என் தலையில் அடிக்க முயன்றுர் நான் கையைக் கொடுத்துத் தடுத்தேன். அந்த அடி எனது இடது கையில் பட்டது. இரண்டாம் எதிரி கோடரிப்பிடியால் முதுகில் அடித்தார். பின் இருவரும் சேர்ந்து அடித்தனர்.'

தனங்கிழப்பு தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த ஆசைப்பிள்ளை சிவப்பிரகாசம் [வயது 30] மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் மே மாதம் 8-ம் திகதி தந்தையும் மைந்தனுமான சிதம்பரி சுந்தரம், சுந்தரம் ஆறுமுகம் ஆகிய இருவரும் ஆசைப்பிள்ளை சிவப்பிரகாசத்தைத் தாக்கிப் படுகாயப்படுத்தியதாகச் சாவகச்சேரி பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27-ம் திகதிக்கு மாஜிஸ்திரேட் ஒத்தி வைத்தாா.

## ஆசிரியரைதா(க்)கிய மாணவ(ன்) எச்சரித்து விடுதலை

காங்கேசன்துறை, செவ்.

''உமது ஆசிரியர் கோர்ட்டிலும்கூட ஒரு நல்ல பாடத்தை உமக்குக் கற்பித்துள்ளார். தமக்குத் தீமை செய்தவரையும் மன்னிக்கவேண்டும் என்பதே அதுவாகும்'' என்று கல்லூரி ஆசிரியர் ஒருவரை அதே கல்லூரி மாணவர் ஒருவர் தாக்கியதான வழக்கில் நீதிபதி கூறினுர்.

சுன்னுகம் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட இவ்வழக்கு, மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரி கோர்ட்டில் பகிரங்க மன்னிப்புக் கோரினுல் வழக்கை முடித்துக் கொள்ளவதாக ஆசிரியர் கூறவே, எதிரி பகிரங்க மன்னிப்புக் கோரினுர். இதைத் தொடர்ந்து நன்னடத்தை நிதிக்கு 10 ரூபா செலுத்தும்படி உத்தர விட்ட நீதிபதி எதிரியை எச்சரித்து விடுதலை செய்தார்.




பரந்தன் தொழிற்சாலை

## மக்களைப் பாதிக்கும துர்நாற்றம்: தடுப்பதற்கு ஆலோசனை

கிளிநொச்சி, செவ்.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி விஸ்தரிப்பு வேலைகள் சம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், அங்குள்ள உயர் உத்தியோகஸ்தர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசனை நடத்தினுர்.

செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அப்போது ஆலோசிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

ஹைட்ரோகுளோறிக் அசிட் தயாரிப்பு சம்பந்தமான திட்டத்தைச் செயல்படுத்துவதில் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எம். பி கேட்டுக் கொண்டார்.

ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் மக்களைப் பாதித்து வருவதால் அதனைத்தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இவைபற்றி கிளிநொச்சி எம். பி., கைத்தொழில் அமைச்சருக்கு எடுத்துக்கூறி இவை சம்பந்தமாக விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## பல்கலைக்கழக டிப்ளோமா பரீட்சை

புன்னலைக்கட்டுவன், செவ்.

அடுத்தமாதம் இலங்கைப் பல்கலைக்கழக 'டிப்ளோமா' பரீட்சைக்கு இவ்வாண்டுபல பட்டதாரிஆசிரியர்கள்விண்ணப்பித்து உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் எனத்தெரிகிறது. இப்பரீட்சையைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சை நடைபெறும். முழுநேரப்பயிற்சியும் பகுதிநேரப்பயிற்சியும் பெறும்வாய்ப்பு இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## கி மு.சங்கம தீர்மானம

அனலைதீவு, செவ்.

அனலைதீவு கிராமமுன்னேற்றச்சங்க பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் புறக்ரர் செ. யோகராசா, உபதலைவர் திரு. ம. தில்லையம்பலம், காரியதரிசி திரு சு. தயாபரராசா, உப காரியதரிசிசெல்வன் சி. கனகசுந்தரம், தனுதிகாரி திரு. பே. கணபதிப்பிள்ளை. நிர்வாக அங்கத்தவர்களாகதிருவாளர்கள்ச. க. காசிலிங்கம் ச. க. சிவனடியான், செ. சிவநேசன், வ. பொன்னம்பலம் முதலியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய வீதிகளையும், ஆஸ்பத்திரி கட்டட வேலையையும் கொந்தராத்து மூலம் எடுத்து நடாத்துவதெனக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## உதவி வித்தியாதிபதிக்கு மகஜர்

அனலைதீவு, செவ்.

அனலைதீவு சதாசிவ ஆங்கில பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்க காரியதரிசி திரு. ஐ. நடராசாவும், அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்க காரியதரிசி திரு. ச. க. காசிலிங்கமும், யாழ். மாவட்ட வித்தியாதிபயைப் பேட்டிகண்டு அனலைதீவுப் பாடசாலைகளிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி அவற்றை நேரில் பார்வையிடவேண்டுமெனக் கோரி ஒரு மகஜரையும் சமர்ப்பித்தனர்.

## இராசமாணிக்கனுருக்கு அனுதாபம்

கொழும்பு, செவ்.

காலஞ் சென்ற பேராசிரியர் மு. இராசமாணிக்கனுருக்கு கொழும்பு இலக்கிய வட்டச் செயற்குழுக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னுரின் மறைவு குறித்து நிறைவேற்றப்பட்ட அனுதாபச் செய்தியை அவரது குடும்பத்தாருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கும் இலக்கிய வட்டம் அனுப்பி வைத்தது.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை பெற்ருர்-ஆசிரியர் சங்க ஆண்டுவிழா தலைமை ஆசிரியர் திரு. செ. வல்லிபுரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், வே. ஆறுமுகம், மு. கணேசலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

புதுவருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு: தலைவர்: திரு. செ. வல்லிபுரம், உப-தலைவர்: திரு. சி. சுப்பிரமணியம், இணைக்காரியதரிசிகள்: திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. ச. பொன்னையா.

## 'பஸ் சேவையை சீர்ப்படுத்துங்கள்'

சங்கானை, செவ்.

''சரித்திரசம்பந்தமாகவும் சமயசம்பந்தமாகவும் பிரசித்தி பெற்ற திருவடி நிலையைத் தரிசிக்கவும் பிரசித்தி பெற்ற பொன்னலை வரதராஜப் பெருமானைத் தரிசிக்கவும் தினமும் இங்கு வரும் யாத்திரீகர்கள் தகுந்த போக்கு வரத்து வசதியின்மையால் மிகவும் கஷ்டமடைகின்றனர்'' என்று சங்கானைப் பட்டினசபை உபதலைவர் திரு. த இராசையா இலங்கைப் போக்குவரத்து சபைத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


## கூப்பன் வேண்டாம்

| | |
|---|---|
| பிறின்டெட் சில்க் | 2/60 |
| வெள்ளை (D) டிரில் | 2/12 |
| நீல (D) டிரில் | 2/43 |
| நைலோன் ஒகண்டி | 4/- |
| நிற டசூர் | 3/40 |
| பிறின்டட் மஸ்லீன் | 4/04 |

விரையுங்கள்

பொதுமால்ஸ்

(C. W. E. பிடவை மாளிகை)

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராய் இந்துக்கல்லூரி இல்லப் போட்டி முடிவுகள்

புன்னலைக்கட்டுவன், செவ்.

உரும்பராய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நகுலா இல்லம் முதலாவது இடத்தையும், இரண்டாவது இடத்தை அருச்சுனா இல்லமும் பெற்றன. வெற்றி முடிவுகள் வருமாறு:-

குண்டெறிதல்; வை. சண்முகநாதன், வி. லோகநாதன், கே. குகதாசன்.

தடியூன்றிப்பாய்தல்: கே. அசோகநாதன், கே. அருள்பரன், வி. இராசதுரை.

நீளம் பாய்தல்: கே. குமரேஸ்வரராஜா, வி. சச்சிதானந்தராஜா, வி. புஷ்பநாதன்.

உயரம் பாய்தல்: எம். டி. செல்வராஜா, கே. விமலேந்திரன், வி. சிவலோகநாதன்

பாரமெறிதல்: எஸ். ஈஸ்வரி, எம். றெஜினு, வி. கமலாதேவி.

மைல் ஓடுகல்; பி. நமசிவாயம், கே. ஜெயவீரசிங்கம், வி. சச்சிதானந்தராஜா.

கயிறு அடித்தல்: எஸ். சந்திராதேவி, கே. இராஜமலர், ஆர். மல்லிகாதேவி.

400 யார் ஓட்டம்; எஸ். ஸ்ரீகாந்தன், எஸ். பொன்னையா, எஸ். குகதாசன்.

கயிறிழுத்தல்: நகுலா இல்லம்.

## ரூ. 57,950 நஷ்ட ஈடு

கொழும்பு, செவ்.

கவலையீனமாகக் காரை ஓட்டிச்சென்றதன் விளைவாக ஏற்பட்ட விபத்தில் தமது கணவன் மரணமானதால், தமக்கும் 3 குழந்தைகளுக்கும் நஷ்டஈடுகொடுக்க வேண்டுமெனக்கோரி தாக்கல் செய்த வழக்கில், கொழும்பைச்சேர்ந்த திருமதி எஸ். சங்கரப்பிள்ளைக்கும், அவரது 3 பிள்ளைகளுக்கும் நஷ்டஈடாக 57,950 ரூபா வழங்க உத்தரவிடப்பட்டது.

கொழும்பு பதில் மாவட்ட நீதிபதி திரு. சி. ஈ. ஜெயவர்த்தன முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணை முடிவில், எதிரியான திரு. கே. கணபதிப்பிள்ளையை, செலவு தொகையுடன் 57,950 ரூபா நஷ்டஈடு கட்டும்படி உத்தரவிட்டார்

63-ம் ஆண்டு ஜனவரி 9-ம் தேதி எதிரியின் காரில் டாக்டர் சங்கரப்பிள்ளை பிரயாணம் செய்தபொழுது முல்லைத்தீவு - நெடுங்கேணி ரோட்டில் உள்ள மதகடியில் கார் விபத்து ஏற்பட்டு டாக்டர் சங்கரப்பிள்ளை வெள்ளத்தில் மூழ்கிமரணமானர்.

எதிரியின் கவலையீனத்தால்தான் இவ்விபத்து ஏற்பட்டதாகக்கூறி வழக்காளியான திருமதிசங்கரப்பிள்ளை 1,00,000 ரூபா நஷ்டஈடு கோரி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## 'இல்லை; இல்லை' என்பதே பதில்

சங்கானை, செவ்வாய்

சண்டிருப்பாயில் உள்ள கூட்டுறவுச் சமாசம் ஒன்றில் 'இல்லை இல்லை' என்பதே பதிலாக வந்து கொண்டிருக்கிறதாம்.

''மாசிக் கருவாடு இல்லை; அது இல்லை; இது இல்லை எங்களுக்கு வலி. மேற்குச் சமாசம் கொடுக்கவில்லை'' என்று பதில் சொல்கிறார்களாம். மற்றும் சமாசங்களில் மாசிக் கருவாடு விநியோகம் நடைபெறுகையில் இங்கு மட்டும் இப்படி ஏன் இல்லை என்கிறார்களென்பது பொதுமக்களுக்குப் பெரிய புதிராக இருக்கிறது. இது சம்பந்தமாக மேலிடத்துக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது.

## இரணைதீவில் சுகாதாரவிழா

இரணைதீவு, செவ்

இரணைதீவில் மருத்துவப் பகுதியினரால் சுகாதார விழா கொண்டாடப்பட்டது. இரணைதீவு மருத்துவத்தாதி திருமதி கண்ணம்மா குழந்தைவடிவேலு விழா ஒழுங்குகளைக் கவனித்தார்.

இவ்விழாவில் இரணைதீவு முத்தொழில் மன்றத்தினரதும் மங்கையர் கழகத்தாரினதும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

சுகாதாரராசாவாக பிலேந்திரன் தேவன் என்பவரும் சுகாதாரராணியாக செல்வி செல்வராணி அமிர்தநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். சுகதேகிகளான தாய்மார்கள், கர்ப்பவதிகள் குழந்தைகள் ஆகியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இரணைதீவு மருந்தக பாறுப்பதிகாரி திரு. சிறிகாந்ததேவன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

## பேச்சுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, செவ்.

கருணையப்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 11-வது திருவள்ளுவர் நினைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

[கீழ்ப்பிரிவு]:- சே. சாந்தினி, ந. சிவசோதி, க. மார்க்கண்டு. [மத்தியபிரிவு] ஏ. வரதலட்சுமி, த. நிர்மலாதேவி, சா. தங்கராசா. [மேற்பிரிவு] த. வசந்தகுமார், சி. தெய்வேந்திரன், த. சிவநாதன்.

## லண்டன் பரீட்சைகள்

கொழும்பு, செவ்.

லண்டன் பரீட்சைகளான ஜி. ஸி. ஈ. உயர்தரம் மற்றும் உயர் பரீட்சைகளுக்கான விடைத்தாள்களையும் பெறுபேறுகளையும் இனி மேல் இலங்கைப் பல்கலைக் கழகத்தினரே தயாரிப்பார்களென்றும் இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே மதிப்பீடு செய்வார்களென்றும் கல்வி அமைச்சு அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

## அதிக வட்டி வசூலிக்கிறார்களாம்

கொம்பனித்தெரு, செவ்.

கொழும்பு நகரிலுள்ளபல வட்டிக் கடைக்காரர்களும் அதிக வட்டி வசூலிப்பதாகவும், இது பற்றிப் பொதுமக்கள் பலர் அரசாங்கத்துக்குப் புகார் செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் அறியப்படுகிறது. சட்ட பூர்வமாக நூற்றுக்கு எண்பது சதமே வட்டி வசூலிக்க வேண்டுமாம்.

## மணிஓடர் கிடைக்கவில்லை

கொம்பனித்தெரு, செவ்.

புங்குடுதீவைச் சேர்ந்த ஆறுமுகம் தர்மபாலன் என்ற மாணவன் பொறளையிலுள்ள தமது உறவினருக்கு இம்மாதம் 18-ம் திகதி அனுப்பிவைத்த மணி ஓடர், உரியவருக்கு இதுவரை கிடைக்கவில்லையாம். இதுபற்றி பொறளை தபால் நிலையத்தில் விசாரித்ததில் தாம் அதற்குப் பொறுப்பாளிகளல்ல என்று கூறவே புங்குடுதீவு தபால்நிலையத்தினருடன் தொடர்புகொண்டுள்ளனர். மணிஓடர் வைத்து] அனுப்பிய கடிதம் உரியநாளில் கிடைத்துள்ளதாம்.


எங்கும் எல்லோரும் விரும்பிக் கேட்பது யானை

கிறீம் சோடா

கிறீம் சோடாவின் பொங்கும் நுரையையும் இனிமையையும் அறிய அதனை அருந்திப் பாருங்கள்




CCS எலிபன்ட் ஹவுஸ்
சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்
கொழும்பு - கண்டி - திருகோணமலை

GRANTS 130


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''பெண்களின் நூற்றுண்டு''

## மாதர்சங்க விழாவில் அரசாங்க அதிபர்

கோப்பாய், செவ்.

''கடந்த 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியும் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியுமே மாதர் சமுதாயம் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள காலம். இக் காலங்களிலேயே மாதர்கள் முன்னேற்ற வேலைகளில் முன்னின்றுழைத்து, மாதர் சங்கங்களை அமைத்து, வாக்குரிமைக்காகப் போராடி வெற்றி பெற்றுர்கள். எனவே இந் நூற்றுண்டை 'பெண்கள் நூற்றுண்டு' என்று கூறிக்கொள்ளலாம்''

கோப்பாய் வடக்கு மாதர் சங்கப் புதிய கட்டடத்தையும், சரவணபவானந்த வித்தியாசாலை வீதியையும் திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா கூறினார்: இவ்விழா வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. அபயசேகரா மேலும் பேசுகையில், 'தற்கால மாதர்கள் தையல், நெசவு ஆகிய தொழிற் துறைகளுடன் பூந்தோட்ட ஆக்க வேலைகள் செய்வதிலும் முன்னிற்க வேண்டும். இம் மாதர் சங்கம் மற்றசங்கங்களுடனும் அரசியல் ஸ்தாபனங்கள், சமுதாய உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் ஒத்துழைப்பது பாராட்டத்தக்கது. இங்கு நடைபெற்றிருக்கும் சிரமதானத்தை நோக்கும் போது அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்குமிடையேயுள்ள ஒற்றுமை நன்கு பிரதிபலிக்கின்றது'' என்று கூறினார்.

யாழ். சமூக சேவைப் பகுதி நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம், யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் திரு. எம். எஸ். இராசசிங்கம், யாழ். மாவட்ட கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. கே. பாலசுந்தரம் ஆகியோருட்பட மற்றும் பலரும் பேசினர்.

——

## வேலைநிறுத்த எச்சரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சென்ற வருடம் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட யாழ். மாநகரசபை ஊழியர்கள் சம்பந்தமாக பூரண விசாரணை நடத்திய பின் வேலைக்கமர்த்தியும் இது கால வரையும் தீர்ப்புக் கூருமல் தாமதப்படுத்துவது சென்ற வருடம் நவம்பர் 17-ம் திகதி மேற்படி ஊழியர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகள் இன்னமும் செயல் படுத்தாதையிட்டும் இன்னும் இரு கோரிக்கைகளை முன்வைத்தும் அடுத்த மாதம் 3-ம் திகதி 3 மணித்தியால அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போவதாக தேசிய ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. த. குணரத்தினம் அறிவித்துள்ளார். யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப் பகுதி, மலசுத்திப் பகுதி, நகரசுத்திப் பகுதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த அடையாள வேலை நிறுத்தத்திலீடுபடுவார்களென தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 'ஜீப்'பில் வந்த . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜீப்வண்டியில், அரசாங்க ஊழியர் எனக் கருதப்படுவோரின் மனைவிமார்களும், தாய்மார்களும் வந்து இறங்கியபோது. பக்கத்துக்கடைக்காரர்கள் ஆச்சரியத்துடன், மீண்டும் சுங்கப்பகுதியினர் சோதனை நடத்தப் போகிறுர்களா? என பார்த்துக் கொண்டிருந்தனராம் உள்ளே சென்ற அப்பெண்கள் சேலைப் பார்சல்களுடன் வெளியில் வந்து சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அக்கடையில் விலையுயர்ந்த காஞ்சிபுரம், டெக்கா சேலைகள் கேட்டபோது, கடைக்காரர் 'இல்லை' என மறுத்து விட்டாராம். ஜீப்பில் வந்த பெண்களுக்கு மட்டும் எப்படி கொடுக்கலாம்? என்று கேட்டபோது, அவர்கள் முந்திவந்தார்கள் என பதிலளித்தாராம் கடைக்காரர்.

அருகில் இருக்கும் எனக்கு இத்திடீர் விற்பனை பற்றி தெரியாதபோது, முன்ஏற்பாட்டின்படி அந்தப் பெண்கள் வந்து சேலைகளை வாங்கிச்சென்றுள்ளனரென்று கடைக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

துண்டுப்பிரசுர மூலமோ பத்திரிகைகள் மூலமோ விளம்பரப்படுத்தி இந்த விற்பனை நடைபெற்றிருந்தால், பொதுமக்கள் பயனடைந்திருப்பார்கள் என்றும், அரசாங்க ஊழியர் எனக்கருதப்படுவோரின் சொந்தக்காரப்பெண்களுக்காகவே இந்த 'திடீர்' விற்பனை நடைபெற்றதாக கடைக்கு வெளியில் திரண்டு நின்றவர்களில் ஒரு வயோதிபர் தெரிவித்தார்.


**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
எம். ஜி. ஆர்.—சரோஜா
நடித்த
**கொடுத்து வைத்தவள்**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
ஓய்வு தினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
**குமரிப் பெண்**

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Richard Widmark &
Rosanna Schiaffino
in
**THE LONG SHIP**


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சில உணவுப் பொருள்களின் விலை உயரலாம்

கொழும்பு, செவ்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு சூயஸ் கால்வாய் ஊடாக வரும் உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் தாமதிப்பதாலும் அக்கப்பல்களுக்கு மேலதிக கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதாலும் ஆகஸ்ட் மாதத்தில் சில வகை உணவுப் பொருள்களின் விலை உயரக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு இறக்குமதியான பொருள்களின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப் பட்டது.

வெளிநாட்டுக் கப்பல்களுக்கு சூயஸ்கால்வாய் மூடப்பட்டுள்ளதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

# 'அதிருப்தியுற்ற ஆசிரியர்கள் கொதிப்படைந்துள்ளனர்''

## தேசிய ஆசிரியர்சங்கத் தலைவர்பேச்சு

புன்னாலைக்கட்டுவன், செவ்.

'குறைந்த சம்பளம், பழுதடைந்த கட்டடங்கள், அதிருப்தி நிறைந்த சேவை, அரசாங்கத்தின் மாற்றுந்தாய் மனப்பான்மை, நெருக்கமுற்ற வகுப்பறைகள் இத்தனைக்கும் மத்தியில் கடமையாற்றும் இந்நாட்டு ஆயிரக்கணக்கான ஆசிரியர் அதிருப்தி மேலிட்டுப் பொங்கிக் கொதிப்படைந்து கொண்டிருக்கின்றனர்.'

இவ்வாறு உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபரும், தேசிய ஆசிரியர் சங்கத் தலைவருமான திரு. அ. வைத்திலிங்கம் ஆசிரியரின் 12 கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வெளியிடப் படவிருக்கும் அறிக்கை ஒன்றில் திரு. வைத்திலிங்கம் மேலும் கூறியதாவது:-

'ஆசிரியத் தொழில் மிகக் கடினமானது அறிவுத்திறமையும், பரந்த அடிப்படையில் கரிசனைகளும், நிர்வாகத் திறனும், கல்வித் திறமையும் கொண்டவர்களே ஆசிரியராக இருக்கவேண்டும். ஆனல் பணத்தை மிச்சம் பிடிக்கும் நோக்கத்துடன், அரசாங்கம் உத்தியோகப் பயிற்சியற்ற மாணவ ஆசிரியரை நியமிப்பது வருந்தத் தக்கது.

ஆசிரியர்கள் அரசியல்வாதிகளாலும், உயர் உத்தியோகத்தராலும் பந்தாடப்படும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தன்மான உணர்வுடன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமாயின் ஒன்று திரண்டு போராட ஆயத்தமாயிருக்கவேண்டும்.'

——

### தமிழரசுக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் இன்று மாலை தமிழரசுக் கட்சியின் பிரசாரக்கூட்டம், காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெறும். தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்துவர்.

——

### சந்தேகிக்க...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வசித்துவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மரணமான தர்மராஜாவின் மனைவியெனக் கூறப்படும் தங்கம்மாவும் நேற்றுமுன்தினத்திலிருந்து திடீரென சண்டிலிப்பாயிலிருந்து காணமல் போனது பொலிசாரிடையே பெரும் பரபரப்பையுண்டு பண்ணியுள்ளது. இவர்கள் கொழும்பிலிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. பொலிசாரால் தேடப்பட்டு வரும் மற்றொரு சந்தேக நபரான சிவஞானம் என்பவரும் கடந்த மூன்று மாத காலமாகத் தலைமறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [ந. நி.]

### சமரசம் ஏற்படுத்த மந்திரிகள் செல்வர்

கொழும்பு, செவ்.

கல்முனைப் பகுதியில் இரு சமூகத்தினரிடையே ஏற்பட்டிருக்கும்கலவர நிலைமையை கட்டுப்படுத்தி இரு சமூகத்தினர்கள் மத்தியில் சமாதானத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்தும் முயற்சியில் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் தொழில் வீடமைப்பு மந்திரி ஜனுப் எம். எச். எம். முகமதுவும் வரும் வெள்ளிக்கிழமை கல்முனைக்கு விசேஷ விமானம் மூலம் செல்லவிருக்கிறுர்கள். அங்கு அப்பகுதி தலைவர்களுடனும் மற்றும் பிரமுகர்களுடனும் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

——

### வெளியீட்டு விழா கி. வா. ஜ. கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், புதன்

சைவப்பெரியார் க. இராமச்சந்திரன் எழுதிய 'சமரச ஞானக்கோவை' என்னும் நூல் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது. சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் விழாவுக்குத் தலைமைதாங்குவார். கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் மற்றும் ஈழத்து அறிஞர்கள் உரையாற்றுவர்.

**கொழும்பில்**

ஜூலை முதலாம் திகதி இந்நூல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிடப்படும். திரு. கி. வா. ஜகந்நாதன், திருமதி பொன்னம்மாள் கிருஷ்ண பிள்ளை, திரு. மு. வைரவப் பிள்ளை, திரு. க. நடராஜன் ஆகியோர் உரையாற்றுவர். நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் விழாவுக்குத் தலைமைவகிப்பார்.

——

### மக்கள் புகார்

இமையாணன், செவ்.

மானிப்பாயில் இயந்திரத் தச்சுத் தொழிற் சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டு வேலை நடப்பதனல் அதன் சத்தம் தாங்காமல் அயலில் உள்ளவர்கள் பலர் இது பற்றி பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். இராசேந்திரத்திரத்திற்குப் புகார் செய்துள்ளனர். மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் பாடசாலைக்குமிடையில் 'இத்தொழிற்சாலை நடைபெறுகிறது. இத்தொழிற்சாலையின் சத்தத்தினல் ஆஸ்பத்திரியில் உள்ளவர்களும், பாடசாலையிலுள்ளவர்களும் மற்றும் அயலவர்களும் பாதிக்கப்படுகின்ருர்கள் எனவும் இதை உடனடியாக அகற்றும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**



**3-வது வெற்றி வாரம்**
**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரேஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**ராஜ்** [நீர்கொழும்பு] **விஜிதா** [ஹட்டன்]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்**

வி. கே. ஆர். பிக்சர்சின்
**செல்வம்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org